# 8. தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை

இந்திய திருநாட்டின் பொருளாதாரம், நீடித்த நிலையான உணவு தேவை மற்றும் வேளாண் சார்புடைய தொழில்கள் வேளாண்மையை சார்ந்தே உள்ளது. வேளாண்மையின் வளர்ச்சி, நீர் ஆதாரங்களை திறம்பட பயன்படுத்துவதின் அடிப்படையில் அமைகிறது. அண்மைக்காலங்களில் நீர் ஆதாரங்களின் பற்றாக்குறை காரணமாக வேளாண் நிலங்கள் படிப்படியாக தரிசு நிலங்களாகவோ, வேளாண்மை அல்லாத தொழில்களுக்கு பயன்படுத்தப்படும் நிலங்களாகவோ மாறி வருகிறது. தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் பல்வேறு திட்டங்கள் மூலம் வேளாண்மையின் அடிப்படை ஆதாரங்களான நீர்வளம் பேணுதல் மற்றும் மண் அரிமானத்தை தடுத்தல் ஆகியவை செயலாக்கப்படுகின்றன.

தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை 2002 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, கீழ்கண்ட பல்வேறு நீர்வடிப்பகுதி திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது.

- வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம்
- ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்
- தேசிய மானாவாரி நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்
- நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதி
- ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத் திட்டம்

மேற்கண்ட திட்டங்களைத் தவிர இம்முகமை மத்திய மற்றும் மாநில அரசுகள் வழங்கும் நிதிக்கு இணைப்பு முகமையாக கீழ்கண்ட திட்டங்களுக்கு செயல்பட்டு வருகிறது.

- தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம்
- தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம்
- வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை

➢ வேளாண்மை தகவல் இணைப்பு மையம்

➢ தேசிய மண்வள மற்றும் உர மேலாண்மை திட்டம்

இம்முகமையின் மூலம் மேற்கண்ட திட்டங்கள் தவிர 2010–2011 ஆம் ஆண்டு முதல் மேற்கு தொடர்ச்சிமலை மேம்பாட்டு திட்டம் தேனி, திண்டுக்கல் மற்றும் மதுரை ஆகிய மூன்று மாவட்டங்களில் நீர்வடிப்பகுதியின் அடிப்படையில் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

இம்முகமையின் மூலம் செயல்படுத்தும் அனைத்து திட்டங்களிலும் மண் மற்றும் நீர்வளம், வனங்களை மேம்படுத்துதல் மற்றும் பயிர் உற்பத்தி திறனை அதிகரித்தல் ஆகியன முக்கிய அம்சமாக அமைந்த போதிலும் இத்திட்டங்களுக்கிடையே சிறு சிறு வேறுபாடுகள் அமைந்துள்ளது. மத்திய அரசின் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சகத்தின் மூலம் 1972 மற்றும் 1993 முதல் முறையே வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தேசிய மானாவாரி நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மத்திய அரசின் வேளாண் மற்றும் கூட்டுறவு அமைச்சகத்தின் மூலம் வழங்கப்படும் நிதியினைக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. நபார்டு உதவியுடன் செயல்படுத்தப்படும் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதி திட்டத்தில் 50 % நபார்டு நிதி உதவியாகவும் மீதமுள்ள 50 % கடனாகவும் வழங்கப்படுகிறது.

### 1. வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம்

தமிழ்நாட்டின் பெரும்பாலான பகுதி வறண்ட சீதோஷ்ண நிலையை கொண்டதாகவும் சீரற்ற பருவ மழை பெய்யும் தன்மையை உடையதாகவும் உள்ளது. நீர்வடிப்பகுதிகளிலுள்ள பயிர் உற்பத்தி, நில, நீர் மற்றும் மனிதவளம் ஆகியவற்றின் உற்பத்தி திறன் போன்றவற்றுக்கு வறட்சியினால் ஏற்படக்கூடிய மோசமான விளைவுகளை குறைக்கும் நோக்குடன் 1972–73 ஆம் ஆண்டு முதல் தமிழகத்தின் ஒரு சில மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்ட வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம்



தற்போது வறட்சியால் பாதிக்கப்படும் என மத்திய அரசால் அறிவிக்கை செய்யப்பட்ட 17 மாவட்டங்களிலுள்ள 80 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் இப்பகுதிகளில் வறட்சியால் ஏற்படும் பாதிப்புகளில் இருந்து பாதுகாக்கும் பொருட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தில் செயல்படுத்தப்படும் நீர்வடிப்பகுதிகளின் அங்கீகாரம் மத்திய அரசால் தனித்தனி பிரிவுகளாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. 1999–2000 முதல் 2006–2007 வரையிலான காலத்தில் 1222 நீர்வடிப்பகுதிகளை 7 பிரிவுகளாக மொத்த திட்ட மதிப்பு தொகை ரூ.33670 இலட்சம் செலவில் 6.141 இலட்சம் எக்டர் பரப்பினை மேம்படுத்த ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. மத்திய மற்றும் மாநில அரசுகளால் விடுவிக்கப்பட்ட தொகையான ரூ.30658 இலட்சத்தில் ரூ.29211 இலட்சம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமைகள் மூலமாக 17 மாவட்டங்களில் 5.385 இலட்சம் எக்டர் பரப்பினை மேம்படுத்த செலவழிக்கப்பட்டுள்ளது. 2006–2007 ஆம் ஆண்டுக்குப் பின்னர் புதிய திட்டங்கள் எதுவும் மத்திய அரசால் ஒப்பளிப்பு செய்யப்படவில்லை.

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்ட செயலாக்கத்திற்காக 2011–2012ஆம் நிதி ஆண்டில் மத்திய அரசு ரூ.806 இலட்சமும், மாநில அரசு தன் பங்காக ரூ.248 இலட்சமும், விடுவிக்கப்பட்டு மேம்பாட்டு பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2011–2012 ஆம் ஆண்டில் ரூ.1525.90 இலட்சம் செலவிடப்பட்டு 0.254 இலட்சம் எக்டர் பரப்பு மேம்படுத்தப் பட்டுள்ளது. 2012–2013ஆம் ஆண்டில் மீதமுள்ள 0.756 இலட்சம் எக்டர் பரப்பு மேம்படுத்தப்படவுள்ளது. மத்திய அரசு இத்திட்டத்திற்கான பங்களிப்பை டிசம்பர் 2012 உடன் முடித்துக் கொள்ள முடிவு எடுத்துள்ளது. இத்திட்டம் செயல்படுத்தப்படும் ஊராட்சி ஒன்றியங்களின் பட்டியல் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

## 2. ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்

ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் வனம் அல்லாத தரிசு நிலங்களை வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளுக்கான திட்டம் செயல்படுத்தப்படாத ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டுவருகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் மழை நீரை சேமித்து அதன் உதவியுடன் தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றுவதாகும். இத்திட்டம் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளுக்கான திட்டம் போல் அல்லாமல், மாநில அரசுக்கு வனம் சாரா தரிசு நிலங்களை திட்ட அணுகுமுறையின் மூலம் மேம்படுத்துவதற்கு ஓர் வாய்ப்பளித்துள்ளது. தற்போது 24 மாவட்டங்களில் உள்ள 96 ஊராட்சி ஒன்றியங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் நீர்வடிப் பகுதிகள் மத்திய அரசால் திட்டவாரியாக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1999–2000 ஆம் ஆண்டு முதல் 2006–07 ஆம் ஆண்டு முடிய மொத்தம் 80 திட்டங்கள் மூலம் 910 நீர்வடிப்பகுதிகளில் ரூ.26220 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் 4.576 இலட்சம் எக்டர் நிலத்தை மேம்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் ரூ.23199 இலட்சம் விடுவித்துள்ளன. இதில் ரூ.22037 இலட்சம் 24 மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமைகளால் செலவு மேற்கொள்ளப்பட்டு 3.781 இலட்சம் எக்டர் நிலம் மேம்படுத்தப்பட்டுள்ளது. 2006–2007 ஆம் ஆண்டுக்குப் பின்னர் புதிய திட்டங்கள் எதுவும் மத்திய அரசால் ஒப்பளிப்பு செய்யப்படவில்லை.

ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டச் செயலாக்கத்திற்காக 2011–2012 ஆம் நிதி ஆண்டில் மத்திய அரசு ரூ.455 இலட்சமும், மாநில அரசு தன் பங்காக ரூ.29 இலட்சமும் விடுவிக்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2011–2012 ஆம் ஆண்டில் ரூ.981 இலட்சம் செலவிடப்பட்டு 0.163 இலட்சம் எக்டர் பரப்பு மேம்படுத்தப்பட்டுள்ளது. 2012–2013 ஆம் ஆண்டில் மீதமுள்ள 0.795 இலட்சம் எக்டர் பரப்பு



மேம்படுத்தப்படவுள்ளது. மத்திய அரசு இத்திட்டத்திற்கான பங்களிப்பை டிசம்பர் 2012 உடன் முடித்துக் கொள்ள முடிவு எடுத்துள்ளது. இத்திட்டம் செயல்படுத்தப்படும் 24 மாவட்டங்களில் உள்ள 96 ஊராட்சி ஒன்றியங்களின் பட்டியல் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

## 3. தேசிய மானாவாரி நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் (நவப்ரா)

தேசிய மானாவாரி நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் (நவப்ரா) தமிழகத்தில் 8வது ஐந்தாண்டு திட்ட காலத்திலிருந்து (1990–91) செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்ட செலவினத்தை மத்திய மற்றும் மாநில அரசுகள் முறையே 90:10 என்ற அடிப்படையில் பகிர்ந்து கொள்கின்றன.

11 வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் 18 மாவட்டங்களில் 200 நீர்வடிப்பகுதிகளில் 1.156 இலட்சம் எக்டர் நிலப்பரப்பினை ரூ.6936 இலட்சம் செலவில் 5 ஆண்டுகளில் மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. 2007–08 முதல் 2010–11 வரை 0.476 இலட்சம் எக்டர் பரப்பளவு மேம்படுத்த ரூ.2857 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. 2011–2012 ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் ரூ.231 இலட்சம் விடுவிக்கப்பட்டு 0.038 இலட்சம் எக்டர் பரப்பு பண்படுத்தப்பட்டது. மேலும் 2012–2013 ஆண்டில் ரூ.999 இலட்சம் செலவில் 0.166 இலட்சம் எக்டர் பரப்பு பண்படுத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் செயல்படுத்தப்படும் ஊராட்சி ஒன்றியங்களின் பட்டியல் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம், ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் மற்றும் தேசிய மானாவாரி நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்களின் செயல் திட்டம் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு, முடிவு பெறும் தருவாயில் உள்ளது. மேற்கண்ட திட்டங்களை ஒருங்கிணைத்து, இத்திட்டங்களுக்கு மாற்றாக ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டம் 2009–2010 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 4. ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத் திட்டம்

ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத் திட்டம் 24 மாவட்டங்களில் 2009–2010 முதல் 1632 நீர்வடிப்பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் செலவினத்தை மத்திய மற்றும் மாநில அரசுகள் முறையே 90:10 என்ற அளவில் பகிர்ந்துகொள்கின்றன. மத்திய அரசு 2009–2010, 2010–2011 மற்றும் 2011–2012 ஆம் ஆண்டுகளுக்கு இத்திட்டத்தின்கீழ் ரூ.1,01,057 இலட்சம் செலவில் ஏழு ஆண்டு காலத்தில் 8.421 இலட்சம் எக்டர் பரப்பு மேம்படுத்தப்பட ஒப்புதல் வழங்கி இதுவரை மத்திய மற்றும் மாநில அரசின் நிதியாக ரூ.10,237 இலட்சம் வழங்கப்பட்டு ரூ.4369 இலட்சம் செலவில் ஆரம்ப கட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 0.353 இலட்சம் எக்டர் பரப்பு மேம்படுத்தப்பட்டுள்ளது.

**குறிக்கோள் :**

- ❖ இயற்கை வளங்களையும், வாழ்வாதாரத்தினையும் சமஅளவில் எடுத்துச் செல்ல நீர்வடிப்பகுதி மேம்பாடு மற்றும் திறமையான நீர்வள மேலாண்மையையும் சமுதாய பங்களிப்புடன் செய்தல்.
- ❖ இயற்கை ஆதாரங்களை பராமரித்து மேம்பாடு செய்து பாதுகாப்பதன் மூலம் சுற்றுசூழலை மேம்படுத்துதல்.
- ❖ உள்ளூர் வாழ்வாதாரத்தினை மேம்படுத்த திட்டமிட்ட விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த நடவடிக்கைகள் மூலம் வளங்களைப் பாதுகாத்து மறு உற்பத்தி செய்வதற்கும் வழிவகுத்தல்.
- ❖ கிராம சமுதாயத்தினருக்கு நிலைத்த நீர் ஆதாரங்கள் மற்றும் நிதி ஆதாரங்கள் உருவாக்குவதற்காக மழைநீரை நீர்வடிப்பகுதியில் பல்வேறு அணுகுமுறைகளை பின்பற்றி பாதுகாத்தல்.



- ❖ தகவல் தொழில் நுட்பம் மற்றும் தொலை உணர்வு நுட்பங்களைப் பயன்படுத்தி திட்டமிட்டு மேலாண்மை மற்றும் மதிப்பீடு செய்தல்.
- ❖ ஊரகப் பகுதிகளில் ஒட்டுமொத்த வளர்ச்சியை ஊக்கப்படுத்துதல்.

மாநில அளவிலான புள்ளி விவர மையம் மற்றும் மாவட்ட அளவிலான நீர்வடிப் பகுதி புள்ளி விவர மையம் அமைக்கப்பட்டுள்ளது.

நான்கு முதல் ஏழு ஆண்டுகள் வரை தொடர்ந்து செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத் திட்டத்தின் கீழ் 2009–2010 ஆம் ஆண்டிற்கான 50 ஒப்புதல் பெறப்பட்ட திட்டங்களுக்கான 20% நிதியாக முறையே ரூ.5617 இலட்சம் மற்றும் ரூ. 624 இலட்சம் மத்திய மற்றும் மாநில அரசு விடுவித்துள்ளது. இதுவரை திட்டப் பகுதிகளில் ஆரம்ப கட்டப் பணிகளான நுழைவு கட்டப் பணிகள், மக்கள் பங்கேற்பு அணுகுமுறை, அடிப்படை விபர கணக்கெடுப்பு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் ஆகிய பணிகள் முடிவுற்று திட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது.

2010–2011 ஆம் ஆண்டிற்கான 62 திட்டங்களும், 2011–2012ஆம் ஆண்டிற்கான 56 திட்டப் பகுதிகளும் மத்திய அரசால் ஒப்பளிப்பு பெறப்பட்டதில் இதுவரை 6% நிதி ஆதாரமாக ரூ.3996 இலட்சம் மத்திய, மாநில அரசால் விடுவிக்கப்பட்டு ஆரம்ப கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் செயல்படுத்தப்படும் ஊராட்சி ஒன்றியங்களின் பட்டியல் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு நீர்வடிப்பகுதி முகமையின் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின் விவரங்கள்.**

| வ. எண் | விவரங்கள் | வறட்சிக்கு இலக் காகும் பகுதிகள் திட்டம் | ஒருங்கி ணைந்த தரிசு நில மேம் பாட்டுத் திட்டம் | தேசிய மானாவாரி நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் | நீர்வடிப் பகுதி மேம்பாட்டு நிதி | ஒருங் கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண் மைத் திட்டம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | மத்திய மாநில அரசின் பங்களிப்பு | 75:25 | 11:1 | 90:10 | 50% மாநில அரசு 50% நபார்டு | 90:10 |
| 2 | செயல்படுத்தப்படும் மாவட்டங்கள் | 17 | 24 | 18 | 24 | 24 |
| 3 | செயல்படுத்தப்படும் ஊராட்சி ஒன்றியங்கள் | 80 | 96 | 45 | 78 | 128 |
| 4 | ஒப்பளிப்பு செய்யப் பட்ட திட்டங்கள் | 7 | 80 | 200 | 155 | 168 |
| 5 | நீர்வடிப்பகுதிகளின் எண்ணிக்கை | 1222 | 910 | 200 | 155 | 1632 |
| 6 | மேம்படுத்தப்பட உள்ள பரப்பு இலட்சம் எக்டரில் | 6.141 | 4.576 | 1.156 | 1.729 | 8.421 |
| 7 | மேம்படுத்தப்பட்ட பரப்பு இலட்சம் எக்டரில் | 5.385 | 3.781 | 0.476 | 0.261 | 0.353 |
| 8 | திட்ட காலம் | 5 வருடம் | 5 வருடம் | 5 வருடம் | 6 வருடம் | 4 –7 வருடம் |
| 9 | எக்டருக்கான நிதி (ரூபாயில்) | 6000 | 6000 | 6000 | 12000 | 12000 |
| 10 | பயனாளிகளின் பங்களிப்பு இதர வகுப்பினர் | 10% | 10% | 10% | 16% தொழிலா ளர்களின் பங்களிப்பு | 10% |
| | பயனாளிகளின் பங்களிப்பு ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / பொதுநிலம் | 5% | 5% | 5% | | 5% |



**திட்ட செயலாக்கத்திற்கான வழிகாட்டி நெறிமுறைகள்:**

மேற்கண்ட திட்டங்களை செயல்படுத்திட நீர்வடிப்பகுதியில் மக்கள் பங்கேற்புடன் முழுமையான திட்ட காலத்திற்கு (5 அல்லது 7 ஆண்டு) கிராம பஞ்சாயத்து / நீர்வடிப்பகுதி குழுவால் செயல்திட்டம் தயாரிக்கப்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவரின் ஒப்புதல் பெற்று மத்திய அரசு மற்றும் மாநில அரசின் வழிகாட்டுதலின்படி நடைமுறைப்படுத்தப்படுகிறது.

**திட்ட செயலாக்கம்**

நீர்வடிப்பகுதி அமைந்துள்ள கிராம பஞ்சாயத்து / நீர்வடிப்பகுதி குழு மேற்கண்ட திட்டப் பணிகளில் அந்த நீர்வடிப்பகுதிக்கு தேவையான பணிகளை தேர்ந்தெடுத்து கிராம சபையின் ஒப்புதலை பெற்று மாவட்ட ஆட்சியர் / தலைவர், மாவட்ட நீர்வடிப் பகுதி முகமை அவர்களின் நிர்வாக அனுமதியின்படி பணிகளை அந்த கிராமத்தில் உள்ள பயனாளிகள் குழு மூலம் செயல்படுத்துகிறது.

நீர்வடிப்பகுதி குழு குறைந்தபட்சம் 10 உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும். இவர்களில் பயனாளிகள் குழு, சுய உதவிக் குழு, ஆதிதிராவிடர் / பழங்குடியினர், நிலமற்ற மகளிர், நீர்வடிப்பகுதி வளர்ச்சி அணி உறுப்பினர்கள், இவர்களில் தலா ஒரு உறுப்பினர் வீதம் ஐந்து பேர் நியமனம் செய்யப்பட வேண்டும். இந்த குழுவினருக்கான தலைவரை கிராம சபை தேர்வு அல்லது நியமனம் செய்திடலாம். குழுவிற்கு செயலர் ஒருவரை நியமனம் செய்ய வேண்டும். இந்த குழுவானது நீர்வடிப்பகுதி மேம்பாட்டு அணி உறுப்பினர்களின் தொழில்நுட்ப உதவியுடன் செயல்படும். இக்குழு தமிழ்நாடு சங்க பதிவு சட்டம் 1975ன் படி பதிவு செய்யப்பட வேண்டும்.

தற்போது நடைமுறையில் உள்ள ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத் திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம், ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டு திட்டம் மற்றும் தேசிய மானாவாரி நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றில் கீழ்கண்ட பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.

**நுழைவு கட்டப்பணி**

கிராம மக்களிடத்தில் திட்டம் குறித்து நம்பகத்தன்மையை பெறுவதுடன் அவர்களை இத்திட்டத்தில் முழுமையாக ஈடுபடுத்துவதற்கு கிராமத்தின் உடனடி தேவை பணிகளான குடிநீர் ஆதாரங்கள் ஏற்படுத்துதல், பொது இயற்கை ஆதாரங்களை மேம்படுத்ததுல், நிலத்தடி நீரை செறிவூட்டுதல், உலர் களங்கள், கதிரடிக்கும் களங்கள் அமைத்தல் மற்றும் சிறு பாலங்கள் ஏற்படுத்துதல் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன.

**நிறுவனம் மற்றும் திறன் மேம்பாடு பயிற்சி**

திட்ட நிதி ஒதுக்கீட்டில் 5 சதவீதம், நிறுவனம் மற்றும் திறன் மேம்பாடு பயிற்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. பல்வேறு நிலைகளில் உள்ள பங்கீட்டாளர்களான மாநில / மாவட்ட அளவிலான அலுவலர்கள், திட்ட செயலாக்க முகமை அலுவலர்கள், நீர்வடிப்பகுதி வளர்ச்சி அணி உறுப்பினர்கள், நீர்வடிப்பகுதி குழுக்கள், சுய உதவிக்குழுக்கள், நீர்வடிப்பகுதி பயனாளிகள் நீர்வடிப்பகுதி செயலர்கள் மற்றும் நீர்வடிப்பகுதி கிராம விவசாயிகள் ஆகியோருக்கு பயிற்சி வழங்கப்படுகிறது.

**வளர்ச்சிப் பணிகள்**

தனியார் நிலங்களில், கீழ்க்கண்ட வளர்ச்சிப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**அ. நிலமேம்பாடு**

தனியார் நிலங்களில் நிலம் சமன்படுத்துதல், சம உயர வரப்பு அமைத்தல், வண்டல் மண் பரப்புதல், கல்வரப்பு அமைத்தல், தடுப்புச்சுவர் அமைத்தல், கோடை உழவு, தாவர வரப்பு அமைத்தல் மற்றும் தொடர் குழி அமைத்தல் ஆகிய நில மேம்பாட்டு பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.

**ஆ. நீர்வள மேம்பாடு**

நீர்வள மேம்பாட்டு பணிகளாக பண்ணைக்குட்டை அமைத்தல், கசிவு நீர்க்குட்டை அமைத்தல். மற்றும் குளம், குட்டைகளை தூர்வாறுதல் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன.



**இ. தாவரவள மேம்பாடு**

வேளாண் காடுகள் அமைத்தல், பழமரக் கன்றுகள் வளர்த்தல், தீவனப்பயிர் மேம்பாடு செய்தல், செயல் விளக்கப்பாத்தி அமைத்தல் மற்றும் வீட்டுத் தோட்டம் அமைத்தல் ஆகியவை தாவர வள மேம்பாட்டு பணிகளாக செயல்படுத்தப்படுகிறது.

**ஈ. பொதுப்பணிகள்**

நீர்வடிப்பகுதிகளில் உள்ள பொது நிலங்களில் தடுப்பணைகள் கட்டுதல், கால்நடைக் குட்டை அமைத்தல், வரத்துக் கால்வாய் அமைத்தல் மற்றும் சீரமைத்தல், ஊரணி சீரமைத்தல், கண்மாய் தூர்வாறுதல் மற்றும் குடிநீர் ஆதார மேம்பாடு, சமுதாய நாற்றங்கால் பண்ணை அமைத்தல் மற்றும் சமூக காடுகள் வளர்த்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**பண்ணை உற்பத்தி திட்டம் மற்றும் குறுந்தொழில்கள்**

இத்திட்டத்திற்காக 10% நிதி ஒதுக்கப்பட்டு ஒரு பயனாளி / குழுவிற்கு அதிகபட்சமாக ரூ.24000/– நிதி உதவி அளிக்கப்படுகிறது. இதன் மூலம் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை விளைபொருட்களுக்கு மதிப்புக் கூட்டுதல், விதை உற்பத்தி மற்றும் சுத்திகரிப்பு செய்தல், மண்புழு உரம் தயார் செய்தல், காளான் உற்பத்தி செய்தல், கால்நடை, கோழிப்பண்ணை அமைத்தல், செங்கல் தயாரித்தல், மண்பாண்டம் தயாரித்தல், வேளாண் கருவிகள் வாடகைக்கு விடுதல், பனை கைவினைப் பொருட்கள் தயாரித்தல், ஊதுபத்தி தயாரித்தல், பாய் முடைதல் மற்றும் நிகழ்ச்சி மேலாண்மை ஆகிய தொழில்களை மேற்கொள்ள வழிவகுக்கிறது.

**சுய உதவிக்குழு மற்றும் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கான வாழ்வாதாரப்பணிகள்**

நீர்வடிப்பகுதிகளில் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்காக சுய உதவிக்குழுக்கள் மற்றும் பயனாளிகள் குழுக்கள் அமைக்கப்பட்டு நிதி உதவி வழங்கப்படுகிறது. சுய உதவிக்குழுக்களுக்கு

வழங்கப்படும் நிதி வட்டியின்றி தவணைமுறையில் மீளப் பெறப்பட்டு இதர குழுக்களுக்கு சுழற்சி முறையில் வழங்கப்படுகிறது. இந்நிதியின் மூலம் கன்றுகள் நடவுசெய்தல், பராமரித்தல் மற்றும் பாதுகாத்தல், சமுதாய நாற்றங்கால் அமைத்தல், தீவனப்புல் வளர்த்தல் மற்றும் சேமித்தல், விதை உற்பத்தி மற்றம் சேமித்தல், நிலக்கடலை உடைக்கும் ஆலை, அறுவடை இயந்திரம் வாடகைக்கு விடுதல், கறவை மாடுகள் வளர்த்தல், பால்பண்ணை நிர்வாகம் செய்தல், கால்நடை மற்றும் கோழிப்பண்ணை அமைத்தல், ஈமு மற்றும் ஜப்பான் காடை வளர்த்தல் ஆகிய தொழில்கள் தொடங்க வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

**5. நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதி (நபார்டு உதவியுடன்)**

நபார்டு உதவியுடன் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதி திட்டம், 2004–2005 ஆம் ஆண்டு முதல் ரூ.6000 இலட்சம் மதிப்பீட்டில் 100 நீர்வடிப்பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**குறிக்கோள்**

1. நீர்வடிப்பகுதி பங்கேற்பு தொடர்பான செய்திகளை பரப்புதல்.
2. அரசு, அரசு சார்ந்த மற்றும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களை இத்திட்டத்தில் பங்கேற்க செய்தல்.
3. இத்திட்டம் செயல்படுத்தப்படும் பகுதிகளின் தேவைக்கேற்ப நீர்வடிப்பகுதிகளை மேம்படுத்த நீர்வடிப்பகுதி சங்கங்கள் மற்றும் நீர்வடிப்பகுதி குழுக்களை உருவாக்குதல்.

**நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதியின் இனங்கள்**

21.11.2007 முதல் புதிய திட்ட வழிமுறையின்படி செயல்படுத்தப்படுகிறது.

1. நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதியின் கொள் திறன் வளர்ப்பு நிலை பணிகளுக்கு 100 சதவிகிதம் நபார்டு வழங்கும் மானியமாகும்.
2. நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதியின் முழு செயல்பாட்டு நிலை பணிகளுக்கு 50 சதவிகிதம் மாநில அரசுக்கு நபார்டு வழங்கும் கடன் மற்றும் 50 சதவிகிதம் நபார்டு வழங்கும் மானியமாகும்.



3. வட்டி விகிதம் 4.5%
4. திருப்பி செலுத்தும் காலம் – ஒன்பது ஆண்டுகள் (3 ஆம் ஆண்டு முதல் திருப்பி செலுத்த வேண்டும்)

**திட்ட காலம்**

| | | |
|---|---|---|
| 1. | கொள்திறன் வளர்ப்பு நிலை (50 முதல் 100 எக்டர்) | 18 மாதங்கள் |
| 2. | சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்க | 6 மாதங்கள் |
| 3. | திட்ட செயலாக்கம் / முழு செயல்பாட்டு நிலை | 4 வருடங்கள் |
| | **மொத்த காலம்** | **6 வருடங்கள்** |

**திட்ட செயலாக்க பகுதி**

நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதி திட்டம் கீழ்காணும் 24 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கோயம்புத்தூர், கடலூர், தர்மபுரி, திண்டுக்கல், காஞ்சிபுரம், கரூர், கிருஷ்ணகிரி, மதுரை, நாமக்கல், பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, தேனி, தூத்துக்குடி, திருநெல்வேலி, திருவள்ளூர், திருவண்ணாமலை, திருச்சி, வேலூர், விழுப்புரம் மற்றும் விருதுநகர். இத்திட்டம் செயல்படுத்தப்படும் ஊராட்சி ஒன்றியங்களின் பட்டியல் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

மாநில வழிகாட்டுதல் குழுவால் தேர்வு செய்யப்படும் நீர்வடிப்பகுதிகளை தவிர்த்து இராமநாதபுரம், திண்டுக்கல், தூத்துக்குடி, திருச்சி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய 5 மாவட்டங்களிலும் பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான ஒருங்கிணைந்த மேம்பாட்டு முன்னோடித் திட்டத்தின் கீழ் நபார்டு மூலம் முழு மானியத்தில் 10 நீர்வடிப்பகுதிகள் உள்ளன.

2009–2010 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும் புதிய முழு செயல்பாட்டு நிலையில் பல்வேறு இனங்களுக்கு நிலையான நிதி ஒதுக்கீடு :

| | | |
|---|---|---|
| 1. | ஒரு எக்டருக்கான செலவு | ரூ.12,000 |
| 2. | திட்ட செயலாக்கம் 70% | ரூ. 8,400 |
| 3. | நிர்வாகச் செலவு 10% | ரூ. 1,200 |
| 4. | நிலமற்ற விவசாயி மற்றும் பெண்களின் வாழ்க்கைத்தர மேம்பாடு 7.5% | ரூ. 900 |
| 5. | சமூக ஒருங்கிணைப்பு மற்றும் பயிற்சி 12.5% | ரூ. 1,500 |

**திட்ட செயலாக்கம்**

இத்திட்டத்தின் முதல் 18 மாதங்களில் கொள் திறன் வளர்ப்பு நிலை பணிகளும், பின்னர் 6 மாதங்களில் சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கும் பணிகளும் முதல் இரண்டு ஆண்டுகளில் நபார்டு மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மூன்றாம் ஆண்டு முதல் தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமைக்கு இத்திட்டங்கள் முழு செயலாக்கம் மேற்கொள்ள நபார்டு மூலம் ஒப்படைக்கப்படுகிறது.

தற்போது நபார்டு நிதி உதவியுடன் 10 நீர்வடிப்பகுதிகள் மானியத்திலும் மற்றும் 145 நீர்வடிப்பகுதிகள் கடன் அடிப்படையிலும் செயல்படுத்தப்படுகிறது. இதில் 79 நீர்வடிப்பகுதிகளுக்கு முழுசெயலாக்க நிலைக்கு தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மூலமாக நிதி வழங்கப்பட்டுள்ளது. 2010–2011 வரை ரூ.1265 இலட்சம் செலவில் 0.200 இலட்சம் எக்டர் நிலம் மேம்படுத்தப்பட்டுள்ளது. 2011–2012ஆம் ஆண்டில் ரூ.368 இலட்சத்தில் 0.061 இலட்சம் எக்டர் நிலம் மேம்படுத்தப்பட்டுள்ளது. 2012–2013 மற்றும் 2013–2014 ஆம் ஆண்டுகளில் ரூ.441 இலட்சம் செலவில் 0.076 இலட்சம் எக்டர் நிலம் மேம்படுத்தப்பட உள்ளது.



**6. தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம்**

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டமானது, வேளாண்மை தொகுப்பில் ஆண்டுக்கு 4% வளர்ச்சி அடையும் வகையில் செயலாக்கப்படுகிறது. இத்திட்டம் தமிழகத்தில் 2007 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசின் கூடுதல் நிதி உதவியாக பெறப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்திற்கு, இணைப்பு முகமையாக செயல்படுகிறது.

**குறிக்கோள்கள் :–**

- ❖ வேளாண்மையில், விவசாயிகளை அதிக அளவில் பங்கேற்க செய்தல்.
- ❖ திட்டமிடுதலில் நெகிழ்வுத்தன்மை
- ❖ பயிர் மற்றும் உள்ளூர் தேவையை முன்னுரிமை அளித்து திட்டத்தில் பிரதிபலித்தல்
- ❖ விவசாயிக்கு முக்கிய பயிரிலிருந்து கிடைக்கும் மகசூல் இடைவெளியை குறைத்தல்
- ❖ நவீன தொழில்நுட்பங்கள் வழங்குவதுடன் விவசாயிக்கு அதிக வருமானம் பெற செய்தல்
- ❖ விவசாயத்தில் மட்டுமல்லாது விவசாயம் சார்ந்த இதர உபதொழில்களிலும் அதிக உற்பத்தி மற்றும் உற்பத்தி திறன் பெற்றிட வழிவகுத்தல்.

இத்திட்டத்தில் வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம், விதைச்சான்று, வேளாண் விற்பனை, கால்நடை, பால் உற்பத்தி, மீன்வளம், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், கூட்டுறவுத்துறை மற்றும் பொதுப்பணித் துறையின் பாசன மேம்பாடு ஆகிய துறைகளின் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

மாநில அளவிலான ஒப்பளிப்பு குழு, இத்திட்டத்தின் திட்டக் கருத்துருக்களை ஒப்புதல் செய்து அதன் செயலாக்கத்தை மேற்பார்வையிட்டு ஆய்வு செய்யும் பொருட்டு ஏற்படுத்தப்பட்டது. மாநில அளவிலான ஒப்பளிப்பு குழு கூட்டத்தில், அரசு தலைமைச் செயலர் தலைவராகவும், வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலர், துணை தலைவர் மற்றும் உறுப்பினர் செயலராக இருப்பர். பல்வேறு துறைகளின் அரசு செயலர்கள், வேளாண் மற்றும் தோட்டக்கலைத்துறை ஆணையர்கள், கால்நடை மற்றும் மீன்வளத்துறை இயக்குநர்கள், தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக துணைவேந்தர்கள், உறுப்பினர் செயலர், மாநில திட்டக்குழு ஆகியோர்கள் உறுப்பினர்கள் ஆவர். மத்திய அரசின் வேளாண் & கூட்டுறவுத்துறை மற்றும் கால்நடை, பால்வளம் & மீன்வளத் துறைகளின் இணை செயலர்கள் இக்குழுவில் மத்திய அரசின் பிரதிநிதிகள் ஆவர்.

ஒவ்வொரு வருடமும் மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப வேளாண் மற்றும் சார்பு துறைகளிடம் திட்ட கருத்துருக்கள் பெறப்பட்டு, மாநில அளவிலான ஒப்பளிப்பு குழு கூட்டத்தில் விவாதித்து, அங்கீகரிக்கப்படும். மாநில அரசு, அங்கீகரிக்கப்பட்ட திட்ட கருத்துருக்களுக்கு அரசு ஆணை வெளியிட்டு அதற்குண்டான நிதியினை, திட்டத்தை செயல்படுத்தும் துறைகளுக்கு ஒதுக்கீடு செய்கிறது.

**ஆண்டு வாரியாக மத்திய அரசின் நிதியளிப்பு மற்றும் செலவின விவரம் (ரூபாய் இலட்சத்தில்)**

| வ. எண் | வருடம் | மத்திய அரசு நிதியளிப்பு | செலவினம் |
|---|---|---|---|
| 1 | 2007–08 | 15360 | 18312* |
| 2 | 2008–09 | 14038 | 14475* |
| 3 | 2009–10 | 12790 | 12790 |
| 4 | 2010–11 | 25003 | 17315 |
| 5 | 2011–12 | 33306 | 14190 |
| | **மொத்தம்** | **100497** | **77082** |

-



* மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டை விட, மாநில அளவிலான ஒப்பளிப்புக்குழு கூட்டத்தில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட திட்ட கூடுதல் தொகை, மாநில அரசினால் மேற்கொள்ளப்பட்டது.

## 7. திருந்திய தரிசுநில மேம்பாட்டு திட்டம்

**நிலமற்ற ஏழை விவசாய தொழிலாளர் குடும்பங்களுக்கு அரசு தரிசு நிலங்களை இலவசமாக வழங்கும் திட்டம்**

இது வரை **2,12,965** ஏக்கர் அரசாங்க தரிசு நிலத்தினை **1,78,994** விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு ரூ.2717 இலட்சம் செலவில் **53,818** ஏக்கர் பரப்பில் தரிசு நிலங்கள் சீர்படுத்துதல், தொகுப்பு நிலங்கள் மேம்படுத்துதல் மற்றும் பண்ணைக் குட்டைகள் அமைத்தல் ஆகிய பணிகள் இத்திட்டத்தின்கீழ் நடைபெற்றுள்ளது.

இத்திட்டம் **2006–2007**ஆம் ஆண்டு முதல் சென்னை மற்றும் நீலகிரி நீங்கலாக இதர அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு, வருவாய்த் துறை நில ஒப்படைப்பு செய்யும்பட்சத்தில், நிலமேம்பாட்டுப் பணிகள் தொடர்ந்து நடைபெறும்.

**தொகுப்பு நில மேம்பாடு – நோக்கங்கள்**

I. 10 ஏக்கர் மற்றும் அதற்கு மேற்பட்டு ஒரே தொகுப்பாக உள்ள நிலங்களில் நீர் ஆதாரம் இருப்பின், நில மேம்பாடு செய்யப்படுகிறது.

II. சிறு மற்றும் குறு விவசாயிகளின் தரிசு /புஞ்சை பட்டா நிலங்கள் சேர்ந்த 50 ஏக்கர் மற்றும் அதற்கு மேற்பட்ட ஒரே தொகுப்பாக உள்ள நிலங்களில் நில மேம்பாடு செய்யப்படுகிறது.

நீர்வளம் இல்லையெனில் விவசாயிகள் விருப்பத்திற்கு ஏற்ப உயிர் எரிசக்தி மரக்கன்றுகள் மற்றும் தீவனப் பயிர்கள் நடவு செய்து தரப்படுகிறது.

**திட்ட செயலாக்கம்**

**அ. 10 ஏக்கர் மற்றும் அதற்கு மேற்பட்ட தொகுப்பு நில மேம்பாடு**

இத்திட்டத்தில் 10 ஏக்கர் மற்றும் அதற்கு மேற்பட்ட நிலத்தொகுப்பில், 130 தொகுப்பு நிலங்களில் மேம்பாட்டு பணிகள் முடிக்கப்பட்டும் 5 தொகுப்பு நிலங்களில் பணிகள் நடைபெற்றும் வருகின்றன. இதன் மூலம் 2,526.16 ஏக்கரில் ரூ.547 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டு பழ மரக்கன்றுகள் மற்றும் உயிர் எரிசக்தி மரக்கன்றுகள் நடப்பட்டு உள்ளது. இதில் 5 தொகுப்பு நில மேம்பாட்டு பணிகள் 2012–2013 ஆம் ஆண்டில் முடிக்கப்பட உள்ளது.

**ஆ. 50 ஏக்கர் மற்றும் அதற்கு மேல் தொகுப்பாக உள்ள தனியார் பட்டா தரிசு/புஞ்சை நிலங்களில் பழ மரக்கன்றுகள் நட்டு மேம்பாடு செய்தல்**

இத்திட்டத்தில் 21 தொகுப்பு நிலங்களில் மேம்பாட்டு பணிகள் முடிக்கப்பட்டு 18 தொகுப்பு நிலங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் மூலம் 2,188.25 ஏக்கரில் ரூ.244 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டு பழ மரக்கன்றுகள் மற்றும் உயிர் எரிசக்தி மரக்கன்றுகள் நடப்பட்டு உள்ளது. இதில் 18 தொகுப்பு நில மேம்பாட்டு பணிகள் 2012–2013 ஆம் ஆண்டில் முடிக்கப்பட உள்ளது.

**ஆ. 50 ஏக்கர் மற்றும் அதற்கு மேல் தொகுப்பாக உள்ள தனியார் பட்டா தரிசு/புஞ்சை நிலங்களில் வேளாண்மை பயிர்கள் நட்டு மேம்பாடு செய்தல்**

2009–2010 ஆம் ஆண்டு முதல் 7 தொகுப்பு நிலங்களில் மேம்பாட்டு பணிகள் 410.56 ஏக்கரில் ரூ.39 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் மூலம் வேளாண் பயிர் தொகுப்பு நிலங்கள் உருவாக்கப்பட்டு வருகிறது. இதில் 7 தொகுப்பு நில மேம்பாட்டு பணிகள் 2012–2013 ஆம் ஆண்டில் முடிக்கப்பட உள்ளது.



**புதிய முயற்சி**

பல்வேறு நீர்வடிப்பகுதி திட்டங்களின் மூலம் இதுவரை உருவாக்கப்பட்ட நீர்வள, நிலவள ஆதாரங்களை மையமாக வைத்து, வேளாண்மை மற்றும் சார்பு துறைத் திட்டங்களையும் ஒருங்கிணைத்து அந்தப் பகுதியின் குறிப்பிட்ட பயிரை மையமாகக் கொண்டு தொகுப்பு நிலங்கள் அமைத்து விதை முதல் விற்பனை வரை உள்ள விவசாயிகளின் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்து ஒட்டுமொத்த கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்த ஒரு முன்னோடி திட்டத்தை இவ்வாண்டு முதல் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**பன்னிரண்டாவது ஐந்தாண்டு திட்ட குறிக்கோள்**

தமிழ்நாட்டின் மொத்த புவியியல் பரப்பளவான 130.27 இலட்சம் எக்டர் நிலத்தை 18,568 நீர்வடிப்பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இந்த நீர்வடிப்பகுதிகளில் 60.85 இலட்சம் எக்டர் பரப்பிலான 11,116 நீர்வடிப்பகுதிகள் மேம்படுத்துவதற்கு உகந்ததான நீர்வடிப்பகுதிகளாக உள்ளது. இதில் மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்கள் மூலமாக மாநில பங்களிப்புடன் 38.73 இலட்சம் எக்டர் பரப்பிலான 7,216 நீர்வடிப்பகுதிகள் இதுவரை மேம்படுத்தப்பட்டுள்ளது. பன்னிரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் மீதமுள்ள நீர்வடிப்பகுதிகளில் அதிகமான எண்ணிக்கையிலான நீர்வடிப்பகுதிகளை மேம்படுத்த கருத்துரு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**புவித்தகவல் தொழில் நுட்ப அமைப்பு**

தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையில் பொதுவழிகாட்டு நெறி முறைகளுக்கு இணங்க, செயற்கைக் கோள் புகைப்படங்கள் மற்றும் புவி அளவியல் துணைக்கோள் கருவிகள் அடங்கிய புவித்தகவல் தொழில் நுட்ப அமைப்பு ஏற்படுத்தப்பட்டு சிறப்பாக இயங்கி வருகிறது. இம்முயற்சி, அறிவியல் பூர்வ நீர்வடி நிலப்பகுதிக்கான மேலாண்மைக்கான முக்கியபடியாகும்.

இதன் மூலம்,

- ❖ நீர்வடிப்பகுதியின் எல்லை வரையறுத்தல்:– இதனால் ஒன்றுக்கு மேற்பட்ட திட்டங்கள் ஒரே நீர்வடிப்பகுதியில் செயல்படுவது தடுக்கப்படுகிறது.

- ❖ திட்ட நடவடிக்கையை கண்காணித்தல்:– நீர்வடிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சிப் பணிகளை செயற்கைக்கோள் புகைப்படங்கள் மற்றும் புவி அளவியல் துணைக்கோள் கருவிகள் மூலமாக தொடர் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுகிறன்றன.

- ❖ இணைய தள தகவல் பகிர்வு :– அறிவியல் பூர்வ செயல் திட்டங்களுக்கும், கண்காணிப்பு முறைகளுக்கும் தேவைப்படும் வரைபடங்கள் மற்றும் தகவல்கள் மாவட்ட நீர்வடிப்பகுதி முகமைகளுக்கும், தொடர்பு துறைகளுக்கும் பொது மக்கள் பார்வைக்கும் இணைய தளம் மூலம் தகவல் பகிர்வுக்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது.